இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 85 – ஒலி: 61 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 24 – ஞாயிற்றுக்கிழமை 11 அக்டோபர் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 85 - Issue 61 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 24 - Sunday 11 October 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

துரோகத்துக்குக் கிடைத்த இடைக்கால வெற்றி!

பொய் பிம்ப அரசியலின் வீழ்ச்சி தொடங்கிவிட்டது!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, அக்.11-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இடைத்தேர்தல் முடிவுகள் குறித்து அறிக்கை ஒன்றை நேற்று முன்தினம் வெளியிட்டார். அதில் "துரோகத்துக்குக் கிடைத்த இடைக்கால வெற்றி" என்றும், "பொய் பிம்ப அரசியலின் வீழ்ச்சி தொடங்கி விட்டது" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

நடந்து முடிந்த மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டு தொகுதியிலும் மிகக்கடுமையாகத் தேர்தல் பணியாற்றிய தொண்டர்கள், முன்னணியினர், உடன்பிறப்புகள், கூட்டணிக் கட்சியின் தலைவர்கள் ஆகிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்பட்டமான ஜனநாயகப் படுகொலை!

சட்டமன்றத் தேர்தல் முடிந்த ஐந்தே



மாதத்தில் திணிக்கப்பட்டதுதான் இந்த இடைத்தேர்தல். வாக்களித்த மை அழிவதற்கு முன்னால் மக்களின் விருப்பத்தை அழித்துவிட்டு இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவியை விட்டு விலகி, அடுத்த நிமிடமே ஆளும் கட்சியில் சேர்ந்தார்கள். அப்பட்டமான ஜனநாயகப் படுகொலை நடந்தது. அதனால்தான் இந்த இடைத்தேர்தல் நடந்தது.

பதவி விலகிய இருவரையே வேட்பாளர்களாக அறிவித்து, தேர்தலைச் சந்தித்தது ஆளும்கட்சி. அதிகார பலம், ஆட்சி பலம், பணபலம், போலீஸ் பலம் ஆகிய வற்றைப் பக்கபலமாக வைத்து த.வெ.க. இந்தத் தேர்தலை எதிர்கொண்டது. சினிமா கவர்ச்சி பலத்தை மட்டுமே நம்பி அரசியல் களத்தில் குதித்து - பெரும் பான்மை பலம் இல்லாவிட்டாலும் குதிரை பேரங்களின் மூலமாக முதலமைச்சர் ஆகியுள்ள விஜய், இந்த இடைத்தேர்தலிலும் ரீல்ஸ் காட்சிகளே கைகொடுக்கும் என்று நம்பினார்.

டீ குடித்தார், டிராக்டர் ஓட்டினார், முருங்கைக்காய் பறித்தார், தெருத்தெருவாகப் போனார். எந்தவொரு இடைத்தேர்தலுக்கும், ஒரு முதலமைச்சர் பதவியில் இருப்பவர் இப்படித் தெருத்தெருவாகப் போனது இல்லை. இந்த இரண்டு தொகுதியில் வெற்றி பெற்றால்தான் தனக்கு இனி அரசியல் வாழ்க்கை என்ற முடிவோடு செயல் பட்டார்.

வெற்றி பெற – த.வெ.க. அடைந்த பதற்றம்!

நான்கு நாட்கள் இரண்டு தொகுதியிலும் இருந்துள்ளார் முதலமைச்சர். வெளியூரில் இருந்து இறக்கிவிடப்பட்ட ஆட்கள், அவர் போகும் சாலைகள் அனைத்தும் வைக்கப்பட்ட பேரிகேட், கொடுக்கப்பட்ட அன்பளிப்புகள், அமைச்சர்களுக்கு மட்டும் எவ்வளவு செலவு செய்துள்ளேன் என்று ஆளும்கட்சி வேட்பாளரே அளித்த வாக்குமூலங்கள் இவை அனைத்தையும் வைத்துப் பார்க்கும்போது இந்த வெற்றியை அடைய த.வெ.க. எவ்வளவு பதற்றத்தில் இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

ஐந்து நிமிடம் பேசினாலே கொத்து புரோட்டா போட்டுவிடுவார் என்று சொல்லப்பட்டவரை நான்கு நாட்கள் கொளுத்தும் வெயிலில் அலைய வைத்துக் கொத்து புரோட்டா போட்டுவிட்டார்கள் மக்கள். கட்சி, தேர்தல், மக்கள் பணிகள் என்றால் என்னவென்று முதலமைச்சர் விஜய் இனியாவது உணர்ந்து செயல்பட வேண்டும்.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகுதான் மகளிருக்குக் கட்டணமில்லாப் பயண விரிவாக்கம், தாய்மாமன் தங்க மோதிரம், அண்ணன் சீர் போன்ற திட்டங்களை அவர் அறிவித்தார். இதுவே தேர்தல் நடத்தை விதிகளை மீறியதுதான். இப்படி பல்வேறு விதிமீறல்களைச் செய்தே இந்த முடிவை த.வெ.க. பெற்றுள்ளது.

என்னைப் பொறுத்தவரையில் துரோகத்துக்கு இடைக்கால வெற்றி கிடைத்துள்ளது. அதே நேரத்தில் பொய் பிம்ப அரசியலின் வீழ்ச்சி தொடங்கிவிட்டது!

அம்பலமான தூயசக்தியின் வேடம்!

ஜி.பே.யில் பணம் - பரிசுப் பொருட்கள் கொடுத்தார்கள். ஊரையே விலை பேசினார்கள் என்பதை இந்த ஆட்சியை ஆதரிக்கும் கட்சிகளே ஒப்புக்கொண்டு பேட்டி கொடுத்த காட்சிகளையும் நாம் பார்த்தோம். தேர்தலுக்கு முந்தைய இரவு வெளியான வீடியோவில் கோடிகளைக் கொட்டிச் செலவிட்டதை வேட்பாளரே ஒப்புக்கொள்ளும் காட்சிகளையும் பார்த்தோம். தூய சக்தியின் வேடத்தை இது அம்பலப்படுத்தியது.

திரைமறைவில், இன்னும் சில கட்சிகளின் வாக்குகளை வாங்கப் பொய்ச்செய்தியைப் பரப்பினார்கள். ஓட்டுமொத்த அமைச்சரவையும் இரு தொகுதிகளுக்குள் மூன்று வார காலம் முடங்கியது. துரோகம் செய்த வேட்பாளர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்த மக்கள் காவல்துறையினரைக் கொண்டு மிரட்டப்பட்டார்கள். 17 வயது இளைஞரைக் கூட கைது செய்தார்கள்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

அறிவுச் செல்வம் - கழகச் செல்வம் - கருத்துச் செல்வம்

முரசொலி செல்வம் 2 ஆம் ஆண்டு நினைவு நாள்!

'முரசொலி' வளாகத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்!

சென்னை, அக்.11 -

திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம் - அறிவுச் செல்வம் - கழகச் செல்வம் - கருத்துச் செல்வம் முரசொலி செல்வம் அவர்களின் இரண்டாமாண்டு நினைவு நாள் நேற்று (10.10.2026)!

இந்நாளில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை 'முரசொலி' வளாகத்தில் தாம் நிறுவியுள்ள முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து வணங்கி திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அதன் விவரம் வருமாறு:-

பேரறிஞர் அண்ணாவின் அன்பில் திளைத்தவர், முத்தமிழறிஞர் கலைஞரின் நெஞ்சில் நீங்கா இடம் பிடித்தவர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்ற துணையாக பக்க பலமாக இருந்தவர்; எல்லாவற்றிற்கும் மேலாக கழகத்தின் கேடயமாகத் திகழ்ந்தவர், முரசொலி செல்வம் அவர்கள்.

'முரசொலி'யின் 35 ஆண்டுகால ஆசிரியர்!

முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த பிள்ளையான 'முரசொலி'யின் பணிகளைத் தன் தோளில் சுமந்து கொண்டு இளமைப் பருவம் முதலே திறம்படச் செயலாற்றியவர்.

கழகத் தலைவர் திராவிட நாயகர் அவர்களின் அரசியல் வாழ்வில் துணையாக நிழலாக நின்று வழிகாட்டியதுடன், கழகத்தின் கொள்கை முரசமாக முரசொலியில் 'சிலந்தி' என்ற பெயரில் கட்டுரைகளை எழுதி, அரசியல் எதிரிகளை அதிர வைத்தவர்



முரசொலி செல்வம் அவர்கள்!

அந்தோ.. அந்த அறிவுச் செல்வத்தை, கழகச் செல்வத்தை, கருத்துச் செல்வத்தை இயற்கை நம்மிடமிருந்து பிரித்து இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. எந்நாளும் நெஞ்சில் அவர் நினைவுகளை ஏந்தி முரசொலி தன் பயணத்தைத் தொடர்கிறது.

முரசொலி செல்வம் அவர்கள் மறைந்ததை அடுத்து - அவர்கள் வளர்த்த 'முரசொலி'யின் வளாகத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முரசொலி செல்வம் அவர்கள் உருவ மார்பளவுச் சிலையினை நிறுவினார்கள்.

நேற்று (10.10.2026) முரசொலி செல்வம் அவர்களின் இரண்டாவது நினைவு நாளில் 'முரசொலி'யின் வளாகத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு மரியாதை செலுத்திட காலை 9.30 மணியளவில் 'முரசொலி' அலுவலகத்திற்கு கழகத் தலைவர் அவர்கள் வருகை தந்து அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்வில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இயக்குநர் அமிர்தம், மு.க.தமிழரசு, முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு எம்.எல்.ஏ., பொன்முத்துராமலிங்கம், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை,

தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர் கே.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு), தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், துணை அமைப்புச் செயலாளர்கள் ப.தாயகம் கவி, எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ.,

சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் இராம கிருஷ்ணன், திருவண்ணாமலை



'முரசொலி' வளாகத்தில் முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச்சிலை!

வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி., கழக தீர்மானக்குழுத் தலைவர் கவிஞர் தமிழ்தாசன், கடையநல்லூர் தி.மு.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ. இள.புகழேந்தி, கழக செய்தித் தொடர்புக் குழு இணைச் செயலாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, 'முரசொலி' சிங்காரம், ஈ.ரோடு இறைவன், ஆயிரம்விளக்கு பகுதிச் செயலாளர்கள் மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம்,

பொதுக்குழு உறுப்பினர் வி.எஸ்.ராஜ், மாவட்டப் பொருளாளர் ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு, புழல் ஒன்றியச் செயலாளர் நாராயணன், கழக மாற்றுத் திறனாளிகள் அணி மாநிலச் செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன், துணைச் செயலாளர் வேங்கை வெங்கடேஷ், மயிலை சி.தசரதன், இரா.தம்பிதுரை, மாவட்டக் கழகச் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் சேப்பாக்கம் எஸ்.எச்.ரகமதுல்லா, எஸ்.எம்.கே. அண்ணாதுரை, வட்டச்செயலாளர்கள் க.சிட்டிபாபு, மோகன், த.பரி, த.குணசேகர், கே.எஸ்.தினேஷ், ஆர்.பாபு, பீட்டர் ஜான், டி.தேவராஜ், விஷ்ணு மற்றும் இதயத் பாஷா, டி.ஜசன்ட், சுரேஷ், முத்துக்குமார் உள்பட நூற்றுக்கணக்கான கழகத்தினர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.